தமிழ் நாடு அரசு

(சுருக்கம்)

பொதுப்பணிகள் – அரசுப்பணியாளர்கள் – நீண்ட நாட்களுக்கு விடுப்பில் செல்லும் காலத்தை பதவி உயர்விற்கு கணக்கிடுதல் கூடாது என வெளியிடப்பட்ட ஆணைகளுக்குத் திருத்தம் – வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி–எம்) துறை

அரசு ஆணை (நிலை) எண். 4

நாள்: 2.1.1985
ரக்தாட்சி, மார்கழி 18
திருவள்ளுவராண்டு 2015

படிக்கப்பட்டது:

அரசு ஆணை (நிலை) எண். 288, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 28.3.84.

-----

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில், பதவி உயர்வுக்குக் கருதப் படாமைக்கு மற்ற காரணங்களோடு நீண்ட காலம் விடுப்பில் இருப்பதையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம் என அரசு முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டிருந்தது:

அ) சாதாரணமாக ஒருவர் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து விடுப்பில் இருந்தால் அவரைப் பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

ஆ) ஆனால், ஆராய்ச்சிப் பட்டம்பெற மேல் படிப்புக்காக விடுப்பில் செல்பவர்களைப் பொறுத்தவரை இந்த வரம்பு நான்கு ஆண்டுகளாக இருக்கும் .

இ) இவ்வாறு மூன்றாண்டுகளோ அல்லது நான்காண்டுகளோ (எந்தவகை விடுவிடுப்பில் இருந்தாலும்) நீண்டகால விடுப்பிற்குப்பின்னர் மீண்டும் திரும்பி வந்து ஓராண்டு பணிக்காலம் முடிந்தபின்புதான் அவருக்குப் பதவி உயர்வு அளிக்கக் கருத வேண்டும்.

2. மேற்சொல்லப்பட்ட ஆணைகள் பதவி உயர்வுக்கு மட்டுமின்றி மாற்றுப்பணி நியமனம் மூலம் உயர் பதவி பெறுவதற்கும் பொருந்தும் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

டி. வி. அந்தோணி,
அரசு இரண்டாம் செயலாளர்.

பெறுநர்:

. . . . . . . . . .

//உண்மை நகல்//

தமிழ் நாடு நகர் நிர்வாகப் பயிற்சி நிலயம்,
கோவை–43.

ந.க.மு. 3/85(319/85/அ2) நாள் 11.2.85.

நகல் அனுப்பப்படுகிறது,

ஒம்/– (க. ஜனார்த்தனம்)
இயக்குநர்.

பெறுநர்:

அனைத்து அலுவலர்களும்

அனைத்துப் பணியாளர்களுக்கும்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

மேலாளர்.

சி.ப./12/2/